
## வாசிப்புப்படிவ தொகுப்பு
## மற்றும் மேலதிக குறிப்பு நூல்

# சித்திரக்கலை

## தரம் 6






தொகுப்பு
திரு.ஜே. லிபிராஜ், BFA(Hons)
சித்திர பாட ஆசிரியர்
கமு/கமு/ சண்முக மகா வித்தியாலயம்
காரைதீவு.

# உள்ளடக்கம் பக்கம்


| | | |
|---|---|---|
| 1. | வெசாக் பண்டிகை | 01 – 02 |
| 2. | தைப்பொங்கல் விழா | 03 |
| 3. | ரமழான் பெருநாள் | 04 – 05 |
| 4. | நத்தார் பண்டிகை | 06 – 07 |
| 5. | பொத்த ஸ்தூபி ( விகாரை) | 08 – 09 |
| 6. | இந்து ஆலயம் | 10 – 11 |
| 7. | இஸ்லாமிய பள்ளிவாசல் | 12 – 13 |
| 8. | கிறிஸ்தவ தேவாலயம் | 14 – 15 |
| 9. | வர்ணங்கள் | 16 – 18 |
| 10. | இரேகைகள் | 19 – 20 |
| 11. | தூரதரிசனம் | 21 |
| 12. | இருபரிமானம், முப்பரிமானம் | 22 |
| 13. | கண்மட்டம் | 23 |
| 14. | பரவுருவச் சித்திரம் | 24 – 25 |
| 15. | கொலார்ஜ் சித்திரம் | 26 |
| 16. | பற்றிக் அலங்காரம் | 27 |
| 17. | அச்சுப்பதித்தல் முறைகள் (கிரபிக் முறைகள்) | 28 |

# பௌத்தர்களின் உள்ளங்களை மலரச் செய்யும் வெசாக் பண்டிகை

- வெசாக் பௌர்ணமி தினம் உலகெங்கும் வாழும் பௌத்த மக்களின் சிறப்பு மிக்க ஒரு நாள் ஆகும்.
- சித்தார்ந்த குமாரனின் பிறப்பு, புத்தர்நிலையை அடைதல், பரிநிர்வாணமடைதல் ஆகிய மூன்று நிகழ்வுகளை முன்னிறுத்தி இப்பண்டிகை கொண்டாடப்படும்.
- வெசாக் பண்டிகையின்போது செயல்ரீதியான நற்செயல்களுக்கும் கொள்கை ரீதியான நற்செயல்களுக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
- பௌத்த வழிபாட்டுத்தலங்களை மையமாகக் கொண்டு வெசாக் பண்டிகை நடத்தப்படும்.
- பௌத்தர்கள் சீலங்காத்தல், போதி பூசை நடத்துதல், அன்னதானம் வழங்குதல், ஒலிப்பூசை நடத்துதல் போன்றவை இப்பண்டிகையில் அடங்கும் சிறப்பம்சங்களாகும்.
- ஊர்ப் பன்னசாலையை முதன்மையாகக் கொண்டு வெசாக் பண்டிகை மனங்கவரத்தக்கவாறு கொண்டாடப்படும்.
- தோரணங்கள்/ அலங்காரப்பந்தல்கள், வெளிச்சக்கூடுகள், வாழ்த்து மடல்கள், விளக்கு வரிசைகள், மின்குமிழ் அலங்காரங்கள், கொடிகள் போன்றவற்றை பண்டிகைக்கு மேலும் அழகுசேர்ப்பனவாகும்.
- வெசாக் பண்டிகைக்கான ஆக்கங்கள் படைப்பதற்காக, ரிசூத்தாள், குருத்தோலை, நிறக்கடதாசி, ஈர்க்கு, சிரட்டை உட்பட பல்வேறு பொருள்கள், மூலப்பொருள்களை பயன்படுத்தப்படும்.
- முற்றத்தில் பல்வேறு தளவுருவங்களை வரைந்து அவற்றின் வழியே வரிசையாக வெசாக் விளக்குகள் வைத்து அவ்விளக்குகளை ஏற்றுவதன் மூலம் அழகிய ஆக்கங்கள் அமைக்கப்படும்.
- கிராமப் புறங்களில் வாழைத்தண்டுகளில் வெவ்வேறு வடிவங்களில் வெசாக் விளக்குகள் ஏற்றுவதன் மூலம் அழகிய ஆக்கங்கள் செய்யப்படும்.
- கடல் மாங்காய் காய்களும் வேறு காய் வகைகளும் விளக்கு வேலை அமைப்பதற்கான மாற்றுப்பொருளாகப் பயன்படுத்தப்படும்.
- வெவ்வேறு இனமக்களின் அழகியல் இரசனை உணர்வை மேம்படுத்துவதற்கு வெசாக் பண்டிகை துணையாகும்.







# தைப்பொங்கல் விழாவுடன் தொடர்பான சித்திரக் கலை

- தைப்பொங்கல் பண்டிகை இந்துக்களின் முக்கியமான ஒரு சமயப் பண்டிகையாகும்.
- தமிழ் வருடத்தின் முதலாவது மாதம் தை ஆகும்.
- தை மாதம் முதலாந்திகதி தைப்பொங்கல் கொண்டாடப்படும்.
- இது ஆங்கில வருடத்தின்படி பொதுவாக சனவரி 14 அல்லது 15 திகதி இடம்பெறும்.
- புத்தரிசியை புதுப்பானையில் இட்டு பாலூற்றிப் பொங்கச் செய்வதே பொங்கல் எனப்படுகிறது.
- பண்டிகைக்கு முன்னர் வீட்டுத்தரை சுத்திகரிக்கப்பட்டு மாட்டுச் சாணம் கொண்டு மெழுகப்படும்.
- அதன் மீது மஞ்சட் பொடி, அரிசி மாவு போன்றவற்றால் மாக்கோலங்கள் அமைக்கப்படும்.
- கரும்பு, வாழைமரம், குருத்தோலை, மாவிலை, இஞ்சி இலை, மஞ்சல் இலை என்பவற்றினால் வீட்டுவாயிலும், பொங்கல் பானையும் அலங்கரிக்கப்படும்.
- அக்கோலத்தின் மீது அடுப்பு மூட்டி பொங்கல் தயாரித்துப் படைக்கப்படும்.
- அக்கோலங்களின் மத்தியில் பூரண கும்பம் வைத்து குத்து விளக்கேற்றி பால்சோறு/ பொங்கல் தயாரித்து, சூரியோதய வேளையில் பால், கரும்பு, கருப்பட்டி, பழங்கள், நெல் என்பன சேர்த்து சூரிய பகவானுக்குப் படைக்கப்படும்.



# ஈகைத்திருநாள், ரமழான் பெருநாள்

- றமழான் பண்டிகை (ஈதுல் /பித்ர் - ஈகைத் திருநாள்) இஸ்லாமியர்களின் முக்கியமான ஒரு பண்டிகையாகும்.
- இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமாகிய றமழான் மாதத்தில் இளம்பிறை காட்சியளித்தது தொடக்கம் பத்தாம் மாதமாகிய ஷவ்வால் மாதத்தின் இளம்பிறை காட்சியளிப்பது வரையிலான 29 அல்லது 30 நாட்களில் பகற் காலத்தில் உபவாசம் செய்து முடித்து (நோன்பிருந்து) ஷவ்வால் மாதம் முதலாம் நாளிலேயே இப்பண்டிகை கொண்டாடப்படும்.
- றமழான் உபவாச காலத்தில் உலகெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் அதிக பத்தி சிரத்தையுடன் மாதம் முழுவதும் நோன்பிருப்பர்.
- உபவாசம்/ நோன்பு என்பது அரபு மொழியில் "ஸவ்ம்" எனப்படும்.
- உபவாசத்தின்போது, அதிகாலத் தொழுகைக்குரிய நேரம் ஆரம்பிப்பதற்கு சற்று முன்னரிலிருந்து சூரியன் மறையும் வரையிலான காலத்தில் உண்ணாமலும் பருகாமலும், நோன்பை முறிக்கும் எந்தக் காரியத்தையும் செய்யாமலும் இருப்பது அவசியமாகும்.
- நோன்பிருக்கும் காலத்தில் பசியின் தாக்கம் உணரப்படுகின்றிமையால் வறியோருக்கு உதவும் மனப்பாங்கு விருத்தியும் எனவே அவ்வாறானோருக்கு உதவ முன்வருவர்.
- இக்காலத்தில் முஸ்லிம்கள் அதிக தானங் செய்வர். இது அரபியில் "ஸதகா எனப்படும். இது தவிர பொதுவாக வசதிபடைத்தோர் தமது கட்டாயக் கடமையான" ஸகாத் வரியையும் இக்காலத்தில் கணக்கிட்டு வழங்குவதுமுண்டு.
- நோன்பிருப்பதால் மனதைக் கட்டுப்படுத்தி வாழும் பயிற்சியும் கிடைக்கும் பொறுமையுடன் வாழும் தன்மையும் விருத்தியடையும். கூடவே நற்பண்புகளும் கட்டுப்பாடும் ஒழுக்கமும் விருத்தியடையும்.
- பத்து வருடங்களுக்கு மேற்பட்ட வயதுடைய சித்த சுயாதீனமுள்ள முஸ்லிம்களான ஆண் பெண் இருபாலார் மீதும் நோன்பிருப்பது கட்டாயக் கடமையாகும். நோயாளிகள், வயோதிபர்கள், கருப்பிணித்தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள் போன்றோருக்கு விதிவிலக்கு உண்டு.
- முஸ்லிம்கள் நோன்பிருக்கும் காலத்தில் பகலிலும் குறிப்பாக இரவிலும் அதிகமதிகமாக தொழுகை, குர்ஆன் ஓதுதல் போன்ற வணக்கங்களில் ஈபடுவார். அதன் மூலம் அதிகமதிகமாக நன்மைகளைப் பெறலாம் என்பது அவர்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையாகும்.
- நோன்பு மாதம் முடியாதவாறு அடுத்த மாதம் தலைப்பிறை வானில் தென்பட்ட, மறுநாள் காலையில் பள்ளிவாசலுக்குச் சென்று தொழுகையில் ஈட்டுவது முஸ்லிம்களின் பிரதானமான செயல்களுள் ஒன்றாகும்.
- றமழான் பெருநாள் தினத்தன்று ஸக்காத்துல் பித்ரா எனும் கொடுப்பது அவசியமாகும். தமது குடும்பத்தில் உள்ள உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் தலா இரண்டு கிலோகிராம் அரிசி வீதம் கணக்கிட்டு அவ்வரிசியை ஏழைகளுக்குக் கொடுத்தல் ஸக்காத்துல் பித்ரா எனப்படும். இதனை பெருநாள் தலைபிறை கண்ட நேரம் முதல் மறுநாள் காலையில் பெருநாள் தொழுகை முடிவடைதல் வரையிலான காலப்பகுதியில் கொடுப்பர்.





# நத்தார் பண்டிகையுடன் தொடர்பான கலைப்படைப்புகள்

- நத்தார் எனும் போர்த்துக்கேய மொழிச் சொல்லிலிருந்து திரிந்த நத்தார் எனும் பதம் பிறப்பு எனப் பொருள்படும்.
- இலத்தீன் மொழியில் நத்தாலிர் எனும் பதத்தின் பொருள் பிறப்பு என்பதாகும்.
- உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவர்கள் இயேசுவின் பிறந்ததினத்தை நத்தார் எனக் கொண்டாடுகின்றனர்.
- இயேசு மனிதப்பிறவியெடுத்த தேவ புத்திரன் என்பது கிறிஸ்தவர்களின் நம்பிக்கையாகும்.
- இயேசு பிரான் மனிதப் பிறவியெடுத்தப் பிறந்த தினமே நத்தார் எனக் கொண்டாடப்படுகின்றது.
- இயேசு பிரான் சமாதானத்தின் குமாரன் எனவும் அழைக்கப்படுகின்றார்.
- இயேசு பிரானின் தாய் அன்னை மரியாள் ஆவார். பாதுகாவள் பிதா ஜுசே ஆவார்.
- இயேசுப்பிரான் திசெம்பர் மாதம் 24 ஆந்திகதி இரவு பிறந்ததாக கருதப்படுகின்றது.
- குடிசனக் கணக்கெடுப்பில் பங்குகொள்வதற்காக பெத்லஹேம் வந்தபோது மாட்டுத் தொழுவத்தில் குழந்தையேசு பிறந்ததாக கருதப்படுகின்றது.
- இயேசு பிரான் நிகழ்த்திய போதனைகள், அவர்கள் நடத்திய அற்புதங்கள், சட்டதிட்டங்களை மீறல் போன்ற காரணங்களுக்காக ஜுதர் தலைவர்கள் அவருக்கு எதிராகக் கிளர்ந்தனர்.
- அக்காரணங்களுக்காக இயேசு பிரான் சிலுவையில் தொங்கவிட்டுக் கொல்லப்பட்டார்.
- பிரதி வருடமும் திசெம்பர் 24 ஆந்திகதி இரவு தேவலாயங்களில் ஒன்று திரளும் கிறிஸ்தவர்கள் நத்தாரை அதாவது இயேசுவின் பிறப்பை கொண்டிடுவர்.
- அன்றைய தினத்தில் ஏழை எளியவர்களுக்கு உணவளிப்பர், ஆடையணி வழங்குவார், பரிசுகளும் வழங்குவர்.
- கிறிஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகைக் கால நேர காலத்துடன் ஆயத்தமாவார். வீடுகளை அலங்கரிப்பார், மாட்டுத் தொழுவங்கள் அமைப்பார், நத்தார் மரங்களை அலங்கரிப்பார்.
- நத்தார் தினத்தன்று புத்தாடை அணிவித்து அறுசுவை உணவு தயாரிப்பர்.
- நத்தார் வாழ்த்துமடல்களைப் பரிமாறிக் கொள்ளல் விசேடமான ஒரு நிகழ்வாகும். நத்தார் தாத்தா வரும்வரை சிறுவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பர்.
- நத்தார் பாடல்கள், நத்தார் நாடகங்கள், நத்தார் திரைப்படக் காட்சிகள் போன்றவையும் இப்பண்டிகைக் காலத்தில் பரவலாக இடம்பெறும்.
- ஏழை எளியவருக்கு தானமளிப்பதும் சிறுவர்க்குப் பரிசுப் பொருள்கள் வழங்கலும் நத்தார் தின விசேட நிகழ்வுகளாகும்.
- இயேசு பிரானின் சமாதானத்தை தூதுச் செய்தியை உலக மக்கள் அனைவரும் மதித்தல் வேண்டும்.






## பௌத்த ஸ்தூபி ஒன்றின் முக்கிய பகுதிகளையும் ஸ்தூபி வகைகளையும் இனங்காண்போம்.

- இலங்கையிலுள்ள தாதுகோபங்களின் சதுரக் கோட்டம் எனும் அமைப்பு இந்தியாவின் சாஞ்சி தூபியின் "ஹர்மிக" எனும் அமைப்பை ஒத்துள்ளது.


தாதுகோபத்தின் அண்டத்தின் தன்மைக்கு ஏற்ப அவை வகைப்படுகின்றன்றன. இவை 6 வகைகளையுடையவையாகும்.

1. தானியக் குவியல் வடிவம் - (தானியாகார) - களனி தாதுகோபம்
2. நீர்க்குழி வடிவம் (பப்புளாகார ) - ருவென்வெலிசாய, தாதுகோபம்
3. மணிவடிவம் (காண்டாகார) தூபாராம தாதுகோபம்
4. தாமரை வடிவம் (பத்மாகார) இலங்கையில் இல்லை
5. பானை வடிவம் (கடாகார) இலங்கையில் இல்லை
6. நெல்லிக்கனி வடிவம் (அம்ளாகார) இலங்கையில் இல்லை.


**தாது கோபம்**





**இந்தியாவின் சாஞ்சி தூபி**




## பிரதான வடிவம் 06




தானியக் குவியல் வடிவம் (தானியாகார)




தாமரை வடிவம் (பத்மாகார)




மணிவடிவம் (காண்டாகார)



நீர்க்குழி வடிவம் (புப்புளாகார)



பானை வடிவம் (கடாகார)




நெல்லிக்கனி வடிவம் (அம்ளாகார)

## இந்துக் கோவிலின் அடிப்படை அம்சங்களையும் கலை ஆக்கங்களையும் இனங்காண்போம்.

- இந்துக் கோவில் மண்டபம், கற்பக்கிரகம், சுற்றுப்பிரகாரம் கோபுரம் என பிரதான பிரிவுகளைக் கொண்டது.
- இந்து ஆலயங்களில் மூர்த்தி அமைந்திருக்கும் கட்டடம், கர்ப்பக்கிரகம், மூலஸ்தானம், கருவறை எனும் பெயர்களால் குறிப்பிடப்படும்.


  வாயிலிலுள்ள கோபுரம் முக்கியமான அமைப்பாகும். கீழ் இருந்து மேல் நோக்கி ஒடுங்கி உயர்ந்து செல்லும் அமைப்பைக் கொண்டது. இதன் நான்கு பக்கங்களிலும் பலவிதமான இந்து சமய தெய்வங்களின் திருவிளையாடல்களை சித்தரிக்கும் சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கும். கோபுரத்தின் உச்சியில் கலசம் அமைந்திருக்கும்.
- ஆலய மண்டபங்களில் பல அலங்கார சிற்ப வேலைபாடுகளுடன் கூடிய தூண்களைக் காணலாம். தூண்தலைகள் வளைந்து நான்கு பக்கங்களிலும் தொங்கும் போதிகை அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டிருக்கும்.
- சிவபெருமானின் வாகனமான கருங்கல்லால் நிர்மாணிக்கப்பட்ட நந்தியின் உருவச் சிலையை இந்துக் கோவில்களில் காணலாம்.
- இலங்கையில் இந்துமத கட்டட நிர்மாணக்கலை மீது தென்னிந்திய கட்டட நிர்மாணக்கலை செல்வாக்குச் செலுத்தியுள்ளது.
- ஆலயக் கர்ப்பக் கிரகம் மூன்று வகையான கட்டட அமைப்பில் நிர்மாணிக்கப் படுகின்றன. கர்ப்பக்கிரகம் கருங்கல் அல்லது செங்கல் சுண்ணாம்புச் சாந்து ஆகிய ஊடகங்களால் நிர்மாணிக்கப்படும். கர்ப்பக்கிரகம் ஆறு அங்கங்களைக் கொண்டது. (உப்பீடம், அதிஷ்டானம், பாதவர்க்கம், பிரஸ்தானம், சிகரம் (விமானம்), தூபி)

இந்துக் கோயிலின் கிடைப்படம்




1. கோபுரம்
2. மண்டபம்
3. சுற்றுப்பிரகாரம்
3. கர்ப்பக்கிரகம்

# கர்ப்பக்கிரகம்




# இஸ்லாமிய பள்ளிவாசல் ஒன்றின் அமைப்பையும் அதன் கலைப் பண்புகளையும் அறிந்து கொள்வோம்.

## இஸ்லாமிய பள்ளிவாசல் - மஸ்ஜித்

- அராபிய வியாபாரிகள் வணிகத்தின் பொருட்டு இலங்கைக்கு வருகை தந்ததன் விளைவாக பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன.
- நுழைவாயிலுக்கு நேர்மேலாக கட்டடத்தின் மேல் காணப்படும் கூர்நுனிப் பகுதியுடன் கூடிய விசாலமான கும்மட்ட வடிவுடன் கூடிய குப்பா (Qubba) எனப்படும் சிகரம் அமைக்கப்படுகின்றது.
- பள்ளியின் முன்புறத்தில் தொழுகைக்கு வருவோர் தம்மைச் சுத்தம் செய்துகொள்வதன் பொருட்டு அமைந்துள்ள நீர்த்தொட்டியும் நுழைவாயிலும் பள்ளிவாசலின் அமைப்பும் விசேட அம்சமாகும்.
- கூர்நுனி வில் விளைவு அமைப்புடைய நுழைவாயில் உள்ளே திறந்த தொழுகை மண்டபமும், பள்ளிவாசலின் இருபுறத்திலும் அமைந்துள்ள தூண்களும் கட்டட நிர்மாணத்தில் அடங்கும்.
- பள்ளிவாசல் இரு மருங்கிலும் காணப்படும் விசேஷமான உருளை வடிவை ஒத்த மிக உயரமான அழகிய மினாரத் (Minaret) காணப்படும். அதன் உச்சி கோளவடிவானது. மினாரத்தின் உச்சியில் பிறையும் நட்சத்திரமும் காணப்படும்.
- பள்ளிவாசல்களில் விக்கிரகங்களோ, ஓவியங்களோ காணப்படுவதில்லை.
- சுவர்கள் அரபி எழுத்துக்களால் குர்ஆன் வசனங்கள் எழுதி அலங்கரிக்கப்படுவதுண்டு. அவ்வசனங்கள் எழுத்தணி முறையில் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கும்.


**இஸ்லாமிய பள்ளிவாசல் - மஸ்ஜித்**






A - பிறையும் நட்சத்திரமும்
B - குபா / உச்சி (Dome)
C - மினாரத்

**எழுத்தணி அலங்காரம் (Calligraphy)**










# கிறிஸ்தவ தேவாலயத்தின் ஆக்கப் பண்புகளை இனங்காண்போம்.


- இலங்கையின் கரையோரப்பிரதேசங்களில் 16 ஆம் நூற்றாண்டில் கிறித்தவ சமயம் பரவியது.
- கிறித்தவ தேவாலயங்கள் போர்த்துக்கேயரால் நிர்மாணிக்கப்பட்டன.
- இலங்கையின் கிறித்தவ தேவாலயங்கள், றோமன் மற்றும் கோதிக்கு எனும் 2 கட்டட நிர்மாண பாணிகளில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- றோமன் முறை தேவாலயங்களில் வளைவான கூரையையும் வட்ட வடிவ வில்வளைவுகளாலுமானது. இத்தேவாலயங்களின் பிரதான நுழைவாசலுக்கு மேலே கண்ணாடியான அழகிய வட்ட வடிவ சாளரம் உள்ளது. அது Rose W indow எனப்படும்.
- கோதிக்கு முறை தேவாலயத்தில் கூர்முனையுடன் வில்வளைவுகளையும் இரு புறமாக குத்துச்சாய்வான கூரையும் கொண்டமைந்துள்ளது. இத்தேவாலயங்களில் கூர் கொண்ட சாளரங்கள் நிறக்கண்ணாடிகளால் அழகுபடுத்தப்பட்டுள்ளது.
- நிறக்கண்ணாடிகளில் கிறிஸ்தவ சமயம் சார்ந்த பல்வேறு சந்தர்ப்பங்களும் பாத்திரங்களும் காட்டப்பட்டுள்ளன.
- தேவாலயத்தின் கலைத்திட்டம் சிலுவை வடிவானது. அது பலிபீடம், அறைகள், நீள் மண்டபம், தூண்கள், பைபிள் வாசிக்கும் பீடம், நுழைவாயில் ஆகிய அம்சங்களைக் கொண்டது.
- நீள் மண்டபத்தில் ஓர் அந்தத்தில் பலிபீடம் அழகிய வேலியினால் நிறைவு செய்யப்பட முடியாது. அதன் பின்சுவரில் ஓவியங்களால்/ செதுக்கு வேலைகளில்/ அழகிய வர்ணக்கண்ணாடிகளால்/ கிறிஸ்த்து பெருமானின் வாழ்க்கைக் கட்டங்கள்/ நிகழ்வுகள் காட்டப்பட்டுள்ளன.
- இலங்கையின் பிரதானமான சில கிறிஸ்தவ தேவாலயங்கள் வருமாறு
  பொரளை (கொழும்பு) - தேவாலயம்
  கொழும்பு - ஒல்லாந்தர் தேவாலயம்
  காலி - கோட்டையினுள் உள்ள கிறிஸ்தவ தேவாலயம்

**கிறிஸ்தவ தேவாலய தரைப்படம்**





1. பலிபீடம்
2. அறை
3. நீள் மண்டபம்
4. தூண்கள்
5. பைபிள் வாசிக்கும் இடம்
6. நுழைவாயில்

## பாணி தேவாலயம்
## உரோமன் - தேவாலயம்





## கொதிமன் பாணி தேவாலயம்



# வர்ணங்கள்

## 1. மூலவர்ணம்

- சிவப்பு, மஞ்சள், நீலம் என்பன மூலவர்ணங்களாகும். இம் மூலவர்ணங்களை தேவைக்கேற்ப ஒன்றுடன் ஒன்று கலப்பதன் மூலம் ஏனைய வர்னங்களைப் பெறலாம். மூலவர்ணங்களை பிரதான வர்ணம், ஆரம்ப வர்ணம், அடிப்படை வர்ணம், மற்றும் தூய வர்ணம் எனவும் அழைக்கப்படும்.




## 2. துணைவர்ணம்

- மூலவர்ணங்களை ஒன்றுடன் ஒன்று கலப்பதன் மூலம் ஊதா, செம்மஞ்சள், பச்சை போன்ற வர்ணங்கள் பெறப்படும். இவை கலப்பு வர்ணங்கள் எனப்படும். கலப்பு வர்ணங்களை அயல் வர்ணம், இரண்டாம் வர்ணம் மற்றும் துணை வர்ணம் எனவும் அழைக்கப்படும்.




## வர்ணச்சக்கரம்




- மூலவர்ணங்கள் மூன்றையும் கலப்பதன் மூலம் கபில வர்ணம் பெறப்படும்.

## எதிர்வர்ணங்கள்

- வர்ணச்சக்கரத்தில் ஒன்றுக்கொன்று எதிரெதிரே உள்ள வர்ணங்கள் எதிர்வர்ணங்களாகும்.
- அதாவது, மூலவர்ணங்கள் இரண்டைக் கலக்கும்போது கிடைக்கும் கலப்புவர்ணமானது எஞ்சிய மூலவர்ணத்திற்கு எதிர்வர்ணமாகும்.

உதாரணம் :

சிவப்பு எதிர்வர்ணம் பச்சை
மஞ்சள் எதிர்வர்ணம் ஊதா
நீலம் எதிர்வர்ணம் செம்மஞ்சள்

## குளிர்வர்ணங்கள்


- கண்ணிற்கு குளிர்மையுணர்வைத் தருவதும் பின்செல்லும் இயல்புடையதுமான வர்ணங்கள் குளிர்வர்ணங்களாகும்.

உதாரணம் : பச்சை, நீலம், ஊதா

## வெப்பவர்ணங்கள்

- நீண்ட தூரத்திற்கு தெரியக்கூடியதும் முன்செல்லும் இயல்புடையதுமான வர்ணங்கள் வெப்பவர்ணங்களாகும்.

உதாரணம் : மஞ்சள், செம்மஞ்சள், சிவப்பு




## பொதுவர்ணங்கள்

- கறுப்பு மற்றும் வெள்ளை என்பன பொதுவர்ணங்களாகும்.

## வர்ண ஒத்திசைவு

- அயல்வர்ணங்களை அருகருகே தீட்டும்போது ஏற்படும் தன்மை வர்ண ஒத்திசைவு எனப்படும்.

## வர்ணபலம்

- வர்ணமொன்றை மென்மையாகவும் கருமையாகவும் தீட்டும்போது ஏற்படும் தன்மை வர்ணபலம் எனப்படும்.

## பயிற்சி வினாக்கள்

1. மூலவர்ணங்கள் எவை?
2. மூலவர்ணங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
3. கலப்புவர்ணங்கள் எவை?
4. கலப்புவர்ணங்கள் வேறு எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
5. மூலவர்ணங்கள் மூன்றையும் கலப்பதன் மூலம் பெறப்படும் வர்ணம் எது?
6. ஊதாவிற்கு எதிர்வர்ணம் யாது?
7. முன்செல்லும் வர்ணங்களை எவ்வாறு அழைப்பர்? உதாரணம் தருக?
8. பின்செல்லும் வர்ணங்களை எவ்வாறு அழைப்பர்? உதாரணம் தருக?
9. பொது வர்ணங்கள் எவை?
10. கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.

    i. வர்ண பலம் :

    ii. வர்ண ஒத்திசைவு :

# இரேகைகள் (கோடுகள்)

- நாம் சித்திரங்களை வரையும்போது பல்வேறுபட்ட இரேகைகளைப் பயன்படுத்தியே வரைகின்றோம்.

**நாம் அதிகமாக பயன்படுத்தும் இரேகைகளும் அவற்றின் பெயர்களும்.**




கிடைரேகை




சமாந்தரரேகை




அலைரேகை




சாய்வுரேகை




ஒழுக்குரேகை




வட்டரேகை



நீள்வட்டரேகை



முட்டை வடிவ இரேகை




வளைவுரேகை



நிலைக்குத்துரேகை



கோணரேகை



சுருள்ரேகை

referans : www.artclassroom.lk

உதாரணம் :

மழையைக் காட்டுவதற்கு ஒழுக்குரேகை பயன்படுத்தப்படும்.
புகையைக் காட்டுவதற்கு சுருள்ரேகை பயன்படும்.

## துரிதரேகைச்சித்திரம்

- சுயாதீனமான இரேகைகளால் விரைவாக வரையப்படும் சித்திரம் துரிதரேகைச்சித்திரம் எனப்படும்.

## புனையாஓவியம்

- இரேகைகளால் ஆக்கப்படும் சித்திரம் புனையா ஓவியம் எனப்படும்.

## கிறுக்கல் சித்திரம்

- இரேகைகளை தாறுமாறாகக் கிறுக்கிய பின்னர் அதில் உருவங்களைக் கண்டுபிடித்து நிறந்தீட்டி ஆக்கப்படும் சித்திரம் கிறுக்கல் சித்திரம் எனப்படும்.

## பயிற்சி வினாக்கள்


1. புனையா ஓவியம் என்றால் என்ன?
2. துரிதரேகைச் சித்திரம் என்றால் என்ன?
3. கிறுக்கல் சித்திரம் என்றால் என்ன?
4. மழையைக் காட்ட பயன்படும் இரேகை எது?
5. பின்வரும் இரேகைகளை வரைக?


   i. ஒழுக்குரேகை
   ii. கோணரேகை
   iii. அலைரேகை
   iv. நிலைக்குத்துரேகை
   v. சுருள்ரேகை


# தூரதரிசனம்


- அண்மையில் உள்ள பொருட்கள் பெரிதாகவும் அதே பொருட்கள் தொலைவில் உள்ளபோது சிறிதாகவும் தெரியும் தோற்றப்பாடு தூரதரிசனம் எனப்படும்.

உதாரணம்:
புகையிரத வீதி
பெருந்தெருக்கள்
மின்கம்பங்கள்






**பயிற்சி வினாக்கள்**

1. தூரதரிசனம் என்றால் என்ன?
2. தூரதரிசனப்பண்பு வெளிப்படும் வகையில் காட்சி ஒன்றை வரைக.

# இருபரிமானம், முப்பரிமானம்


## இருபரிமானம்


- நீளம் அகலம் ஆகிய இரண்டு அளவீடுகளைக் கொண்டு வரையப்படும் சித்திரம் இருபரிமாண சித்திரம் எனப்படும்.



## முப்பரிமானம்

- நீளம் அகலம் உயரம் / கனம்(தடிப்பு) ஆகிய மூன்று அளவுகளைக் கொண்டு வரையப்படும் சித்திரம் முப்பரிமாண சித்திரம் எனப்படும்.






## பயிற்சி வினாக்கள்

1. இருபரிமானம் என்றால் என்ன?
2. முப்பரிமானம் என்றால் என்ன?
3. முப்பரிமானம் வெளிப்படும் வகையில் பந்து மற்றும் உருளை என்பவற்றை வரைக.

# கண்மட்டம்

- கண்மட்டத்தில் வைக்கப்படும் பொருட்களுக்கு மேற்புறமும் கீழ்ப்புறமும் தெரிவதில்லை.
- கண்மட்டத்திற்கு மேலே வைக்கப்படும் பொருட்களுக்கு பொருளின் அடிப்பக்கம் தெரிவதுடன் மேற்பக்கம் தெரிவதில்லை.
- கண்மட்டத்திற்கு கீழே வைக்கப்படும் பொருட்களுக்கு பொருளின் மேற்பக்கம் தெரிவதுடன் கீழ்ப்பக்கம் தெரிவதில்லை.




**பயிற்சி வினா**

1. கண்மட்டத்திற்குக் கீழ் உள்ள பெட்டி ஒன்றை தூரதரிசனப்பண்பு வெளிப்படும் வகையில் வரைக.

# பரவுருவச் சித்திரம்

- குறித்த ஒரு உருவத்தை குறித்த ஒரு ஒழுங்கில் அச்சுப்பதிப்பதன் மூலம் திரும்ப திரும்ப வரைவதுடன் குறித்த ஒரு ஒழுங்கில் வர்ணமும் தீட்டப்பட்டு பெறப்படும் சித்திரம் பரவுரூபச் சித்திரம் ஆகும்.


உதாரணம்:

சீத்தைத்துணி,

பரிசுப்பொதி சுற்றும் தாள்









# கொலாஜ் சித்திரம்

- பல்வேறுபட்ட கழிவு பொருட்களை ஒருங்கிணைத்து ஒட்டுவதன் மூலம் ஆக்கப்படும் சித்திரம் கொலாஜ் சித்திரம் எனப்படும்.





# பற்றிக் அலங்காரம்

- துணியில் மெழுகால் சித்திரங்களை வரைந்தபின்னர் அதனைச் சாயமூட்டி உலர்த்திய பின் சுடுநீரில் அவித்து மெழுகு நீக்கப்படும். இதன்மூலம் மெழுகு நீக்கப்பட்ட இடங்களில் துணியின் ஆரம்ப வர்ணத்தில் சித்திரங்கள் வெளிப்படும். இம் முறையிலான சித்திரங்கள் பற்றிக் அலங்காரம் எனப்படும்.





# அச்சுப்பதித்தல் முறைகள் (கிரபிக் முறைகள்)

## மொனோகிரபிக்

- இது தனி ஒரு வர்ணத்தில் ஒரு பிரதி மட்டும் பெறும் அச்சுமுறை ஆகும்.
- இதற்கு கண்ணாடியின் மீது மையினால் சித்திரம் வரையப் பட்டு அதன்மேல் கடதாசியை வைத்து அழுத்துவதன் மூலம் பிரதி பெறப்படும்.

## லைனோகிரபிக்

- இது தனி ஒரு வர்ணத்தில் பல பிரதிகள் பெறப்படும் அச்சு முறையாகும்.
- இதற்கு குறிப்பிட்ட லைனோ அட்டையில் தேவையான வடிவத்தில் வெட்டி அச்சுத் தயாரிக்கப்பட்டு அதன் மேல் வர்ணத்தை பூசி கடதாசியில் மேல் அழுத்துவதனூடாக பிரதி பெறப்படும்.

## லித்தோகிரபிக்

- இது பல வர்ணங்களில் பல பிரதிகள் பெறும் அச்சு முறையாகும்.
- இதற்காக ஒவ்வொரு வர்ணத்திற்கும் தனித்தனி அச்சுகள் தயாரிக்கப்பட்டு ஒன்றன்மேல் ஒன்றாக அச்சிடுவதன் மூலம் பூரணமான படம் அச்சிடப்படும்.

## ஸ்ரென்சில் அச்சுப்பதிப்பு

- அட்டையிலோ அல்லது ஸ்ரென்சில் தாளிலோ தேவையான உருவங்களை வரைந்து அதை வெட்டி அகற்றிய பின் அதனை ஒரு தாளின் மீது வைத்து வெட்டி அகற்றிய இடைவெளியூடாக மையை பூசுவதன் மூலம் பிரதிகள் பெறப்படும்.